# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE**
Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145


# ஆண்டு 9 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 26.05.2018 (3.00 pm)**

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

பழைமைக்கும் புதுமைக்கும் தன்னை மேம்படுத்திச் செம்மொழியாகத் திகழும் மொழி எம் தாய்மொழி. இது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம்பெரும் மொழி. செம்மையும், செழிப்பும், கவினோடு கவர்ச்சியும் கொண்டது எங்கள் தமிழ்மொழி. அகத்தியமும், தொல்காப்பியமும் சேர்ந்து தமிழ்மொழியை உழுது, உழுது செம்மைப்படுத்தின. இதனாலன்றோ "எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்று மார்தட்டினான் வீரக்கவி பாரதி.

உடலுக்கு உயிர் எப்படி முக்கியமோ அதே போன்று மனித வாழ்விற்குப் பேசும்மொழி முக்கியம். மொழி இல்லை என்றால் நாமெல்லாம் வெறும் ஊமைகள் தான். எமது மொழியே எமது அடையளம். இன்று தமிழர்கள் உலகிலுள்ள எல்லாக் கண்டங்களிலும் பரவிக் கொண்டிருக்கின்றார்கள். இது எமக்கு பொன்னான நேரம். ஏழ்கடல்களுக்கு அப்பாலும் அழகு தமிழைப் பரப்பி, அதன் பெருமையையும் புகழையும் பறைசாற்றி, ஆன்றோர்களும் சான்றோர்களும் கண்ட கனவை நிலை நாட்ட வேண்டும்.

அமிழ்தினும் இனிய மொழி எம்மொழி. எம்மொழியில் எது இல்லை? காதலையும், வீரத்தையும் எடுத்துக் கூறும் அகநானூறு, மற்றும் புறநானூறு நூல்கள். பாண்டிய மன்னர்கள் அமைத்த தமிழ்ச் சங்கங்கள். சேரன் செங்குட்டுவன், கங்கை கொண்ட சோழன் போன்ற மன்னர்கள் இமயம் முதற் கொண்டு எத்திசையிலும் நாட்டிய தமிழ் வித்துக்கள். நாமும் எவ்விடத்திலும் எம்மொழியை அழகாகப் பேசுவோம். அன்றைய தமிழ் இலக்கியங்களையும், இன்றைய தமிழ் இலக்கியங்களையும் வாசித்து இளம் சந்ததியினரான நாம் கசடறத் தமிழைக் கற்போம். எமது தாய்மொழியையே எமது வாய்மொழியாகக் கொள்வோம்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.